**தலைப்பு 176 – துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சு**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய தொழில் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் மீதான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2020 யூன் 26 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 நவம்பர் 20 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அந்த நிதிக்கூற்றுக்களில் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியேகத்தரின் பொறுப்பு**

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளதாக,

(ஆ) முன்னைய வருடத்திற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன என்பது.

## 1.6. நிதிக்கூற்றுக்கள் தொடர்பிலான கருத்துரைகள்

### 1.6.1 நிதி நிலைமைக்கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | தேர்தல்கள் திணைக்களத்திடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டு பொது திறைசேரிக்கு தீர்ப்பனவு செய்ய வேண்டிய கட்டுநிதி மீதியான ரூபா 459,566 தொகை காசு மற்றும் காசுக்கு சமமானவற்றின் கீழ் காண்பிக்கப் பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக நிதி நிலைமைக் கூற்றின் தேறிய சொத்துக்கள் அந்த அளவினால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தன. | 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் அறிவுரைகளின் பிரகாரம் கணக்குளைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | 2020 ஆம் ஆண்டின் போது தேர்தல்கள் திணைக்களத்திடமிருந்து காசோலையொன்று பெற்றுக் கொள்ளப்பட்டு திறைசேரிக்கு அனுப்பப்பட்டுள்ளது. |
| (ஆ) | அமைச்சிற்கு சொந்தமான ரூபா 11,000,000 பெறுமதியான மோட்டார் வாகனமொன்று நிதியல்லாத சொத்துக்களின் கீழ் | 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் | 2020 ஆம் ஆண்டின் போது திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. |

| | | |
|---|---|---|
| காண்பிக்கப்படாதிருந்ததுடன் அமைச்சினால் செயற்பாட்டு குத்தகை முறைமையின் கீழ் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த ரூபா 7,858,109 பெறுமதியான கெப் வண்டியொன்று அமைச்சிற்குரிய நிதியல்லாத சொத்தொன்றாக காண்பிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக நிதி நிலைமை தொடர்பிலான கூற்றில் காண்பிக்கப்பட்டுள்ள நிதியல்லாத சொத்துக்கள் ரூபா 3,141,891 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தன. | அறிவுரைகளின் பிரகாரம் கணக்குளைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | |

### 1.6.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய சான்றுப்படுத்தல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்கு ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றினை தயாரித்து பேணிச் செல்ல வேண்டியமை தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுப்படுத்த வேண்டும். அத்துடன் அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் காலத்திற்கு காலம் மீளாய்வு செய்து அதன் பிரகாரம் கட்டமைப்புக்களை விளைவுள்ள விதத்தில் நடாத்திச் செல்வதற்கு உரிய வேறுபாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டியமையும் அந்த மீளாய்வுகள் எழுத்து மூலம் மேற்கொள்ளப்பட்டு அவற்றின் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2020 ஆம் ஆண்டிற்காக உள்ளக கட்டுப்பாடு தொடர்பிலான கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கையொப்பத்துடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |

### 1.6.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 1/2014 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கை | வருடாந்த கட்டுநிதி தேவைப்பாட்டு திட்டம், நாளதுவரையாக்கப்பட்ட தெற்கு இணைச் சபையின் நிறுவன கட்டமைப்பு மற்றும் பதவியணி தொடர்பான விபரங்கள் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கையில் காண்பிக்கப்படும் தேவைப்பாடுகளின் பிரகாரம் வருடாந்த செயல் நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் வருடாந்த கட்டுநிதி திட்டம், வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) தலைப்பு 176-02- அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வெளிநாட்டு உதவிகளின் அடிப்படையின் கீழ் பிரதான துறைமுக செயற்திட்டங்கள் 03 இற்காக ரூபா 159,000,000 ஆன நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அந்த அபிவிருத்தி செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்தாமையால் ஒதுக்கீடு செய்யப்பட்ட பணம் முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணம் 50 இன் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளுக்கு இணங்க மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டியமை மற்றும் திட்டமிடப்பட்டவாறு செயல் திட்டங்களை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | சாத்தியவள கற்கைக்கு உரிய வரி மற்றும் காப்புறுதி தொடர்பில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிபந்தனைகளுக்கு இணக்கப்பாடு தெரிவிப்பதற்காக நீண்ட காலம் கடந்தமையும் 2019 சனாதிபதி தேர்தல் காரணமாக துறைமுகங்கள் தொழிற்சாலை கட்டிடங்கள் நான்கினை நிர்மாணித்தல் தொடர்பில் அமைச்சரவையின் பெறுகைகள் குழுவின் தீர்மானம் தாமதித்தமையும் காங்கேசன்துறை துறைமுகங்கள் செயற்திட்டத்திற்காக |

| | | | |
|---|---|---|---|
| | | | முன்மொழிவுகள் கோரல் பதிவேடு திருத்தப்பட்டமை மற்றும் மதிப்பீட்டு நடைமுறையின் இடையில் ஏற்பட்ட விடயங்களை தீர்ப்பதற்கு நேர்ந்தமை ஆகிய காரணங்களால் ஒதுக்கீடு செய்யப்பட்ட பணத்தினை பயன்படுத்த முடியாதுள்ளது. |
| (ஆ) | தெற்கு அபிவிருத்திக்கு உரிய 03 செயற்திட்டங்களை நடைமுறைப் படுத்துவதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 1,282,020,000 ஆன தேறிய நிதியேற்பாடு திறைசேரியினால் மேற்கொள்ளப் பட்டிருந்தது. ஆண்டின் இறுதியில் இந்த 03 செயற்திட்டங்களுக்கு உரிய செலவினங்கள் மற்றும் திறைசேரியின் புத்தகத்தின் பிரகாரம் நிலவிய ரூபா 226,008,380 ஆன கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களை சீராக்கம் செய்த பின்னர் மேலும் எஞ்சியிருந்த நிதியேற்பாடு ரூபா 596,587,767 ஆக காணப்பட்டதுடன் அது தேறிய நிதியேற்பாட்டின் 47 சதவீதமாக இருந்தது. | 2018 திசெம்பர் 28 ஆந் திகதிய 2103/33 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் தெற்கு அபிவிருத்திக்கு உரியமாக சமூக பொருளாதார மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை கட்டியெழுப்பும் பணிகள் அமைச்சிற்கு சாட்டப்பட்டிருந்த மையால் மற்றும் அதற்குரிய நிதியேற்பாடுகளும் அமைச்சிற்கு வழங்கப்பட்டிருந்தமையாலும் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைதல் அமைச்சின் பொறுப்பாகும். | அமைச்சினால் சிங்கராஜ ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம், காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டுள்ள இலக்கிடப்பட்ட 185 செயற்திட்டங்கள் காணப்பட்டதுடன் அவற்றுள்ளள 140 செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப் பட்டிருந்தன. மேலும், திறைசேரியினால் மாவட்ட செயலகத்தில் கட்டுநிதி வழங்கப்படாத காரணத்தால் சில செயற்திட்டங்களின் கையிருப்பில் உள்ள பட்டியல்களை தீர்ப்பதற்கு முடியாதுள்ளது. சில செயற்திட்டங்களுக்காக சாத்தியவள கற்கையொன்று மற்றும் செயற்திட்ட அறிக்கைகள் கிடைக்காமை போன்ற காரணங்களால் பணம் செலவு செய்யப்பட்டிருக்கவில்லை. பாதீட்டு மதிப்பீட்டில் காண்பிக்கப்பட்டுள்ள இலக்குகளை இந்த அமைச்சினால் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

## 2.2 கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் ஏற்படுத்தப்படல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக்கூற்றுக்களின் குறிப்பு (iii) இன் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் நிலவிய கடப்பாடுகள் | கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பில் ஆண்டின் இறுதியில் பெற்றுக் | மாவட்ட செயலகங்களினால் இந்த கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் திறைசேரிக்கு அறிக்கையிடப்பட்டிருந்த |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் பொறுப்புக்களின் கூட்டுப்பெறுமதியான ரூபா 156,257,557 மற்றும் திறைசேரியின் கூற்றுக்களின் பிரகாரம் அந்த பெறுமதியானது ரூபா 299,706,210 ஆனமையால் ரூபா 143,448,653 ஆன வேறுபாடொன்று புலப்பட்டது. | கொள்ளப்படும் சரியான தகவல்களின் அடிப்படையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியமை. | காரணத்தால் திறைசேரியின் புத்தகங்களில் ஏற்பட்ட இரட்டை கணிப்பீட்டின் மூலம் இந்த வேறுபாடு ஏற்பட்டிருந்தது. |
| (ஆ) | 03 செலவின விடயங்களுக்கு உரிய வருடாந்த நிதியேற்பாட்டினை விஞ்சி ரூபா 42,645,949 ஆன பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. | நிதியேற்பாடுகளை விஞ்சி எந்த பொறுப்புகளும் ஏற்படுத்தப்படக் கூடாது. | நிதியேற்பாடுகளை விஞ்சி எந்த பொறுப்புகளும் ஏற்படுத்தப்பட கூடாதென்பதுடன் திறைசேரியின் கூற்றுக்களின் பிரகாரம் பொறுப்புக்கள் இரட்டைக் கணிப்பீட்டிற்கு உட்பட்டுள்ளமையால் இந்த வேறுபாடு ஏற்பட்டுள்ளது. |
| (இ) | கணக்காய்வு பரிசோதனையின் பிரகாரம் வெளிப்படுத்தப்பட்டவாறு கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் பொறுப்புக்களாக இனங் காணப்பட்டிராத 2019 ஆம் ஆண்டிற்கான ரூபா 4,313,283 ஆன பொறுப்புக்கள் 2020 சனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களின் போது தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தது. | உள்ளக கட்டுப்பாட்டு முறைமையை வலுப்படுத்துதல் மூலம் ஆண்டிற்கு உரிய செலவினங்களை இனங்காண நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | 2019 ஆம் ஆண்டிற்கு உரிய திறைசேரியின் கணக்கு வைக்கும் நடைமுறை நிறைவு செய்யப்பட்ட பின்னர் சமர்ப்பிக்கப்பட்ட பட்டியல்களின் காரணமாக இந்த தொகை பொறுப்புக்களாக கணக்கு வைக்க முடியாதிருந்தது. |

**2.3 அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பண கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அமைச்சின் வெளிவாரி நிறுவனங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 172,403 தொகை சுமார் 15 வருட காலமாக | தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 1.6, 1.7 மற்றும் 6.3 பிரிவுகள் மற்றும் 2004 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டு | பழைய மீதிகளின் தகவல்களை தேடிக் கண்டறிய முடியாதுள்ளமையால் கடன் மீதியில் பதிவழிப்பதற்கு அரச நிதி திணைக்களத்திடம் கோரிக்கை |

| | | |
| --- | --- | --- |
| அறவிடப்பட்டிருக்கவில்லை. மேலும் பணி நீக்கத்திற்கு உட்பட்ட மற்றும் சேவையை விட்டுச்சென்ற இரு ஊழியர்களிடமிருந்து அறவிட வேண்டிய முறையே ரூபா 293,470 மற்றும் ரூபா 21,140 அறவிடுவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் 1 ஆம் பந்தி மற்றும் 2015 ஒக்தோபர் 09 ஆந் திகதிய பீஎப்டீ/ஆர்ஈடீ/2015/08 பொது(i) ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் 4.3 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | முன்வைக்கப்பட்டுள்ளது. பணி நீக்கத்திற்கு உள்ளாகியுள்ள உத்தியோகத்தர் தொடுத்துள்ள மேன்முறையீட்டு வழக்கின் தீர்ப்பின் அடிப்படையில் பணிக் கொடையிலிருந்து அறவிடல்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க முடியும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| அமைச்சினால் தயாரிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் தெற்கு அபிவிருத்தியின் கீழான 03 செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக ரூபா 1,250 மில்லியனான நிதியேற்பாடு வருடாந்த மதிப்பீட்டின் பிரகாரம் ஏற்பாடு செய்யப்பட்ட போதிலும் அந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்த்த காலச்சட்டகம் மற்றும் எதிர்பார்த்த அடைவு மற்றும் எதிர்பார்த்த பெறுபேறு ஆகியவற்றை திட்டவட்டமாக கூறியிருக்கவில்லை. | 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 2014/01 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் 3 ஆம் பந்தியின் (உ) பிரகாரம் திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டியமை. | எதிர்காலத்தில் இந்த குறைபாடுகளை நிவர்த்திப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3.2 பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கடற்படை செயலகத்தினால் 1971 இன் 52 ஆம் இலக்க வர்த்தக கப்பல்கள் அதிகாரச்சட்டம் அவற்றின் திருத்தங்கள் அடிப்படையில் அறவிடப்படும் மூன்று வகையான கட்டணங்கள் தவிர்த்தவிடத்து 10 தொகுதிகளுக்குரிய ஏனைய 50 வகையான எண்ணிக்கை 2006 ஆம் ஆண்டின் பின்னர் அதாவது 14 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக திருத்தப்படாது காணப்படுகின்றமையால் கவனத்தில் கொள்ளக் கூடிய அளவிலான வருமானம் அரசிற்கு இலக்காகியிருந்தது.<br><br>2018 சனவரி 17 ஆந் திகதிய 01/2018 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் இதன் கீழான 14 தொகுதிகளுக்குரிய கட்டணங்களை திருத்துவதற்கான சட்ட வரைபொன்று 2019 ஆகஸ்ட் 05 ஆந் திகதி நிதி அமைச்சின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள போதிலும் 2020 ஆகஸ்ட் 30 ஆந் திகதி வரையிலும் அது அவதானிப்பு மட்டத்திலேயே காணப்பட்டது. | 2018ஆம் ஆண்டிற்கான பாதீட்டு முன்மொழிவுகளை நடைமுறைப் படுத்துவதற்கு 01/2018 மற்றும் 2018 சனவரி 17 ஆந் திகதிய அரச நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் சேவை வழங்குனர் களிடமிருந்து அறவிடப்படும் கட்டணங்களை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | திருத்தப்பட்ட வரைபு அரச நிதி திணைக்களத்திற்கு முன்வைக்கப்பட்டுள்ள போதிலும் அங்கீகாரம் கிடைக்கப்பெறவில்லை. அந்த திணைக்களத்தின் வாய் மொழி மூல அறிவுரைகளின் அடிப்படையில் கடற்படையின் தரப்பினரிடமிருந்து கருத்து வினவும் பணிகள் மேற்கொண்டதுடன் கொரோனா தொற்று நோய் நிலைமையின் காரணமாக கட்டணங்களை அதிகரித்தல் பொருத்தமற்றது என அறிவிக்கப்பட்டுள்ளது. |

**3.3 எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகள் (Out come) பெற்றுக் கொள்ளப்படாமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) யாழ்ப்பாண தீபகற்பம் மற்றும் தீவுகளுக்கிடையே கடற்கரையை அண்மியதாக பயணிகள் மற்றும் பண்டங்களை போக்குவரத்துச் சேவையினை முறைமைப்படுத்தும் நோக்குடன் கடற்படை செயலகத்தின் யாழ்ப்பாண மாவட்ட உப அலுவலகம் மற்றும் வியத்கம (Slipway) நிர்மாணித்தல் ஆகிய செயற்திட்டங்கள் 2016 ஆம் ஆண்டின் போது நடைமுறைப்படுத்தப் பட்டிருந்தது. 2018 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் ரூபா 65.5 மில்லியன் செலவிடப்பட்டு அடிப்படை நிர்மாண பணிகள் நிறைவு செய்யப்பட்டிருந்த போதிலும் பின்னர் இனங்காணப்பட்ட மேலதிக பணிகளை நிறைவு செய்வதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 16 மில்லியனான நிதியேற்பாடு மேற்கொள்ளப் பட்டிருந்தது. எவ்வாறெனினும் செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியளவில் அந்த பணிகளின் நிதி செயன்முன்னேற்றம் 9 சதவீதமும் பௌதீக செயன்முன்னேற்றம் 10 சதவீதமுமான குறைவான மட்டத்தில் காணப்பட்டது. | செயற்திட்டத்தை சிறந்த முறையில் திட்டமிட்டு நடைமுறைப்படுத்த வேண்டியதுடன் நியாயமான காலச் சட்டகம் ஒன்றினுள் பணிகளை நிறைவு செய்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | தியத்மக (slipway) நிர்மாணப் பணிகள் 2018 திசெம்பர் மாதமளவில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் இனங் காணப்பட்ட மேலதிக பணிகள் 2020 ஒக்தோபர் மாதம் பூர்த்தி செய்யப்படவுள்ளன. அலுவலகத்தின் கட்டிடமொன்றினை நிர்மாணித்தல் 2019 ஏப்ரல் மாதம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் அதன் மேலதிக பணிகளுக்காக பெறுகை நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. 2019 ஆம் ஆண்டின் போது நிதி யேற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டிருந்த போதிலும் கட்டுநிதி வழங்கப்படாமையால் 2019 ஆம் ஆண்டின் போது நிறைவு செய்ய முடியாதிருந்தமை. |

| | | | |
|---|---|---|---|
| | இதன் காரணமாக ஆரம்பத் திட்டத்தின் பிரகாரம் இந்த நிர்மாணங்கள் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 2020 யூலை 31 ஆந் திகதி வரையிலும் பணிகள் நிறைவு செய்யப்பட்டு பொது மக்களின் பயன்பாட்டிற்கு கையளிப்பதற்கு முடியாதிருந்தது. | | |
| (ஆ) | சர்வதேச தொழிலாளர் அமைப்பின் (ILO) சாசனத்திற்கு இணங்க அனைத்து இலங்கை கடற்படையினருக்கும் உயிரியல் இலட்சினைகளுடனான ஆளடையாள ஆவணமொன்றினை வழங்குவதற்கு 2015 ஆம் ஆண்டு முதல் திட்டமிடப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டிற்கு ரூபா 20 மில்லியன் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 53.46 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் செயல் திட்டத்திற்கு உரிய பணிகளிடையே மென்பொருளினை அபிவிருத்தி செய்யும் பணி 50 சதவீதமும் ஏனைய உபகரணங்களை சுவீகரிக்கும் பணி 80 சதவீதமும் நிறைவு செய்வதற்கு எதிர்பார்த்திருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது 20 சதவீதமான முன்னேற்றமே அடையப்பட்டிருந்தது. | எதிர்பார்த்த காலச் சட்டகத்தினுள் குறித்த பணிகளை அடைந்து கொள்வதன் மூலம் இலக்குகளை அடைவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | கடற்படையினருக்காக உயிரியல் அடையாள அட்டைகளை வழங்கும் செயற்திட்டம் 2020 மே 05 ஆந் திகதி நிறைவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளதுடன் மென்பொருள் நிர்மாணம் நிறைவடைந்துள்ள போதிலும் கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை காரணமாக அட்டைகளை இறக்குமதி செய்ய முடியாதிருப்பதால் விநியோகிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | இதன் காரணமாக 2020 யூலை 31 ஆந் திகதி வரையிலும் உயிரியல் இலட்சினைகளுடனான (Biometric features) ஆளடையாள பத்திரமொன்று திட்டமிடப்பட்டு நிறைவு செய்யப்பட்டிருக்க வில்லை. | | |
| (இ) | சிங்கராஜ ஒருங்கிணைந்த பிரதேச அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் காலி, மாத்தறை, களுத்துறை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களின் 978 வீதிகள், நீர் மற்றும் சுத்திகரிப்பு செயற்திட்டங்கள் 58, கல்விச் செயற்திட்டங்கள் 52 மற்றும் ஏனைய 61 செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்து வதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 710 மில்லியன் நிதி ஏற்பாடு மேற்கொள் ளப்பட்டிருந்ததுடன் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டினுள் ரூபா 274 மில்லியன் மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. அந்தந்த மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டிருந்த செயற்திட்டங்கள் தொடர்பில் அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் 159 செயற்திட்டங்கள் மாத்திரம் நடைமுறைப் படுத்தப்பட்டதுடன் அவற்றுள் 18 செயற்திட்டங்களின் பௌதீக செயல் முன்னேற்றம் 50 சதவீதமான குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | வருடாந்த மதிப்பீடுகளுக்கு இணங்க எதிர்பார்த்த கால அட்டவணையின் பிரகாரம் செயற் திட்டங்களை நடைமுறைப்படுத்து வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | வருடாந்த மதிப்பீடுகளில் காண்பிக்கப்படும் இலக்குகள் முன்னாள் தெற்கு அபிவிருத்தி விடயம் ஒப்படைக்கப்பட்டிருந்த அமைச்சினால் வழங்கப்பட்டிருந்ததுடன் இந்த அமைச்சினால் வழங்கப்பட்டது அல்ல.<br>இந்த அமைச்சினால் 159 செயற்திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டதுடன் அவற்றுள் 131 செயற்திட்டங்களின் 100% செயன்முன்னேற்றம் காண்பிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சினால் 2019 நவம்பர் 20 ஆந் திகதி மேற்கொண்ட அறிவித்தல் களின் பிரகாரம் இரத்தினபுரி மாவட்டத்தில் 6 செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப் பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மேற்படி (இ) இல் குறிப்பிடப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மாத்தறை மாவட்டத்தின் 02 வீதி அபிவிருத்தி செயற்திட்டங்கள் மற்றும் 02 நீர் உத்தேச முறைகளை நடைமுறைப்படுத்து வதற்காக முறையே ரூபா 7,889,105 மற்றும் ரூபா 23,396,673 ஒதுக்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும் 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் இந்த செயற்திட்டம் ஆரம்பிக்கப் பட்டிராததுடன் செயன்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் நூற்றுக்கு நூறு சதவீத முன்னேற்றம் உள்ளதாக அறிக்கையிடப் பட்டிருந்தது.<br><br>மேலும், மேற்படி 02 நீர் உத்தேச முறைமைகளை நடைமுறைப்படுத்து வதற்காக உடன்படிக்கை ஒன்றினை கைச்சாத்திடாது தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கு ரூபா 23,396,673 ஆன மொத்த தொகையும் மீளாய்வாண்டினுள் செலுத்தப்பட்டிருந்தது. | செயற் திட்டங்களிலிருந்து எதிர்பார்த்த செயலாற்றலினை அடைந்து கொள்வதற்கும் அவற்றை எதிர்பார்த்தவாறு மக்களின் பயன்பாட்டிற்கு ஈடுபடுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | பாதீட்டு மதிப்பீடுகளில் காண்பிக்கப்பட்டுள்ள 2019 ஆம் ஆண்டிற்குரிய இலக்குகள் தெற்கு அபிவிருத்தி விடயத்திற்கு பொறுப்பான அமைச்சினால் வழங்கப்பட்டமை ஆகும்.<br><br>நடைமுறைப்படுத்தப்படாத இரு வீதி அபிவிருத்தி செயற்திட்டங்கள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.<br><br>அரச நிறுவனமொன்று என்பதால் அந்த நிறுவனத்திற்கு நேரடியாக காசோலை வழங்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் அந்த நிறுவனத்துடன் உடன்படிக்கை கைச்சாத்திடும் இயலுமை தொடர்பில் தேடிப்பார்ப்பதாகவும் பௌதீக செயன் முன்னேற்றம் 100 சதவீதமாக காண்பித்தல் தவறுதலாக இடம்பெற்றுள்ளதாகவும் மாத்தறை மாவட்ட செயலாளரினால் குறிப்பிடப்பட்டுள்ளது. |
| (உ) | மீளாய்வாண்டின் போது 10 சுற்றுலா அபிவிருத்தி செயற்திட்டங்கள் மற்றும் 3 நகர அபிவிருத்தி செயற்திட்டங்கள் ஆகியவற்றை நடைமுறைப்படுத்து வதற்காக ரூபா 200 மில்லியன் நிதியேற்பாடு மேற்கொள்ளப் பட்டிருந்தது. அவற்றுள் ரூபா 169.64 மில்லியன் செலவிடப்பட்டு சுற்றுலா அபிவிருத்தி அல்லது நகர அபிவிருத்திக்கு நேரடியாக | செயற் திட்டங்களிலிருந்து எதிர்பார்த்த செயலாற்றலினை அடைந்து கொள்வதற்கும் அவற்றை எதிர்பார்த்தவாறு மக்களின் பயன்பாட்டிற்கு ஈடுபடுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிதி அமைச்சின் PD/GPS/155/09/01/HA-2019 மற்றும் 2019.11.20 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் பணிகள் ஆரம்பிக்கப்படாத செயற்திட்டங்களை தற்காலிகமாக இடைநிறுத்துவதாக அறிவிக்கப்பட்டமையின் அடிப்படையில் காலி மாவட்டத்தின் அங்கீகரிக்கப்பட்ட செயற் திட்டங்களின் 5 மற்றும் மாத்தறை மாவட்டத்தின் அங்கீகரிக்கப்பட்ட செயற் |

| | | | |
|---|---|---|---|
| | தொடர்பற்ற 19 செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்து வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. அவற்றுள் 12 செயற் திட்டங்களின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்க வில்லை. | | திட்டங்களின் 12 இனை நடைமுறைப்படுத்த முடியாதிருந்தது. |
| (ஊ) | தெற்கு அபிவிருத்தி சபையினால் மாத்தறை மற்றும் காலி மாவட்டங்களில் பிரதான அபிவிருத்தி செயற்திட்டங்கள் 3 இற்கு உரிய 10 உப பணிகள் மற்றும் 3 நீச்சல் தடாகங்கள் நிர்மாணித்தல் ஆகிய உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி செயற்திட்டங்களை பூர்த்தி செய்வதற்காக வருடாந்த மதிப்பீட்டின் மூலம் ரூபா 270 மில்லியன் தேறிய நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த துடன் மீளாய்வாண்டின் போது ரூபா 15.6 மில்லியன் மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. | செயற் திட்டங்களிலிருந்து எதிர்பார்த்த செயலாற்றலினை அடைந்து கொள்வதற்கும் அவற்றை எதிர்பார்த்தவாறு மக்களின் பயன்பாட்டிற்கு ஈடுபடுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் இறுதி பகுதியில் இந்த செயற்திட்ட முன்மொழிவுகள் வழங்கப்பட்டதுடன் தேசிய கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்தின் அங்கீகாரத்தினை பெற்றுக் கொண்டதன் பின்னர் நடைமுறைப்படுத்துவதற்காக மாவட்ட செயலாளர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. 2019 ஆம் ஆண்டினுள் குறித்த ஆரம்ப பணிகள் மேற்கொள்ளப்பட்டு 2020 வருடத்திற்கு எஞ்சியவை பூர்த்தி செய்வதற்காக |

### 3.4 பெறுகைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தெற்கு அபிவிருத்தி இடைச்சபையினால் மேற்கொள்ளப்பட்ட தேதுவ சுற்றுலா செயற்திட்டத்தின் கீழ் உரிய தாவரங்கள் மற்றும் மரங்கள் தொடர்பான சாத்தியவள கற்கை ஒன்றிற்காக மதிய உரையாளரை தெரிவு செய்வதற்கான பெறுகையின் போது விருப்புக்கோரல் | மதியுரையாளர்களை தெரிவு செய்யும் போது அரசின் மதியுரை கோவையில் காண்பிக்கப்பட்டுள்ள வழிகாட்டல்களுக்கு இணங்க வெளிப்படைத் தன்மையுடன் நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | செயற்திட்டத்திற்கு உரிய ஏனைய அடிப்படை கற்கை பணிகள் மேற்கொள்ளும் போது அமைச்சரவையின் பொருளாதார முகாமைத்துவ முறையின் (CCEM) அங்கீகாரத்தின் பிரகாரம் ஒரு தரப்பினரிடமிருந்து மாத்திரம் கூறு விலைகள் கோரப்பட்டு (Single Source Method) |

| | | |
|---|---|---|
| மீளாய்வு செய்தல், உரிய அமைப்புக் குறிப்பீடுகளின் அடிப்படையில் முன்மொழிவுகளை மதிப்பாய்வு செய்தல் ஆகியவை உள்ளடக்கப்பட்ட மதியுரையாளர்களை தெரிவு செய்தல் மற்றும் சேவையில் ஈடுபடுத்துவதற்கான பெறுகைகள் வழிகாட்டி (2017 ஆகஸ்ட்) பின்பற்றப்படுவதற்கு பதிலாக 2006 இன் பண்டங்கள் மற்றும் பணிகளுக்கான பெறுகைகள் வழிகாட்டியின் அடிப்படையில் சந்தை விலை ஒப்பீட்டு முறைமையின் கீழ் கூறுவிலை கோரப்பட்டிருந்தது. மேலும் இதற்கான தொழில் நுட்ப மதிப்பாய்வுக் குழுவினை நியமித்தலும் அந்த வழிகாட்டிகளின் 1.2 இல் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படை பெறுகைகள் நோக்கங்களுக்கு மற்றும் 1.4 இல் குறிப்பிடப்பட்டுள்ள மூல தர்மங்களுக்கு முரணானதாக மேற்கொள்ளப்பட்டிருந்தது. | | மதியுரையாளர்களை தெரிவு செய்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.<br><br>இதுவும் செயற்திட்டத்திற்கு உரிய அடிப்படை கற்கையின் ஒன்றானமையால் கணக்காய்வில் சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ளவாறு பெறுகை நடைமுறையொன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை. சட்டம், சமாதானம் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சின் Minlo/03/PP/GEN/13/17 மற்றும் 2017.09.29 ஆந் திகதிய கடிதத்தில் அதற்காக பெறுகை நடைமுறைகளை பின்பற்றும் தேவைப்பாடு இல்லையென குறிப்பிடப்பட்டிருந்தது. |

## 4. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான பொறியியல் பிரிவிற்கு உரிய கடற்படை பதவி உள்ளடங்களலாக 15 சிரேஷ்ட மட்டத்திலான வெற்றிடங்களும் 22 மூன்றாம் நிலையிலான வெற்றிடங்களும், 35 இரண்டாம் நிலையிலான வெற்றிடங்களும் காணப்பட்டன. | அமைச்சின் பணிகள் மற்றும் நோக்கினை நிறைவேற்றுவதற்கு போதியளவான பதவியணியினை பேண வேண்டியமை. | சிரேஷ்ட மட்டத்திலான பதவிகளுக்கு நிரந்தர மற்றும் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பதற்கு உரிய அங்கீகாரங்கள் கோரப்பட்டன.<br>ஒருங்கிணைந்த சேவைகளின் பதவிகளை நிரப்புவதற்காக ஒருங்கிணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு பல்வேறு சந்தர்ப்பங்களில் அறிவிக்கப்பட்டுள்ளது. |